# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## கம்பெனிகள் (திருத்தம்)

**2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தைத்
திருத்துவதற்கானதொரு சட்டமூலம்**

---

*கேகாலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ தாரக்க பாலசூரிய
அவர்களால் 2019, மார்ச்சு மாதம் 12 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது*

*(2019, பெப்புருவரி மாதம் 25 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

---

[ *274 ஆம் சட்டமூலம்* ]

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 6.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

*இச்சட்டமூலத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## கம்பெனிகள் (திருத்தம்)

### 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கை அரசியலமைப்பு தமது ஆற்றலை பூரணப்படுத்துவதற்கும் தமது தனித்துவமான வகிபாகங்கள் மற்றும் தேவைகளை கவனத்தில்கொள்ளும் நியாயமான போட்டித் தளத்தில் போட்டியிடுவதற்கும் பெண்களிற்கு சமமான உரிமைகளை உறுதிப்படுத்துகின்றதாதலாலும் : முன்னுரை.

தொழில் வலுவில் குறிப்பாக கூட்டாண்மைத் துறையில் இலங்கைப் பெண்களின் பங்குபற்றல் தொடர்ந்தும் குறைவாக இருப்பதுடன், வீழ்ச்சிகண்டும் வருகின்றதாதலால், "கூட்டாண்மைத்துறை பால்நிலை சமத்துவத்தை உறுதிசெய்வதற்காக" கூட்டாண்மைத் துறை பணிப்பாளர் சபைகளில் பெண்களின் நியமனத்தை கட்டாயப்படுத்துவதற்கான சட்டவாக்க ஏற்பாடுகளை மேற்கொள்வது அவசியமானதாதலாலும்:

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

**1**. இச்சட்டம், 2019 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, கம்பெனிகள் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப்பெயர்.

**2**. கம்பெனிகள் சட்டத்தின் 201 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவினை உட்புகுத்துவதுடன் அப்பிரிவு 201அ என்னும் பிரிவாக பயனுறுதலும் வேண்டும்:- முதன்மைச் சட்டவாக்கத்தில் 201அ என்னும் புதிய பிரிவினை உட்புகுத்துதல்.

> "201அ. எந்தவொரு நிறுவனத்தினதும் பணிப்பாளர்களின் எண்ணிக்கை மூன்று அல்லது அதற்கு மேற்பட்டதாக இருக்குமானால், அத்தகைய எண்ணிக்கையில், அத்தகைய பிரதிநிதித்துவத்தை பேணுவது சாத்தியமான சந்தர்ப்பங்களில் மூன்றிலொரு பங்கினர் பெண்களாக இருத்தல் வேண்டும்.".

**3**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.